**62 பாண்டியன் சுரம் தீர்த்த படலம்**

சந்துருசாதன பாண்டியன் சேர, சோழ, பாண்டிய நாட்டை ஒரு குடையின் கீழ் ஆண்டு வந்தான். தீவினை பயனால் அவனுக்கு முதுகில் கூன் விழுந்தமையால் கூன் பாண்டியன் என்றுஅழைக்கப் பட்டான். சேரன் மிகுந்த செல்வத்தைக் கொடுத்து தன் மலை நாட்டைப் பெற்றுச்சென்றான். சோழன் தன் மகள் மங்கையர்க்கரசி யை மணம் செய்துக் கொடுத்தான். அவளுடன்அறிவில் சிறந்த குலச்சி றையார் என்பவரை அனுப்பிவைத்தான். மனைவியுடன் வந்தவரை கூன்பாண்டியன் தன் முதல் மந்திரியாக்கினான்.

கூன் பாண்டியன் சமணர்களது வலையில் வீழ்ந்து சமணனானான். அரசியும் மந்திரியும் சைவதழுவினர். இந்நிலையில் பாண்டிய நாட்டில் மணம் ஓங்கி, வேத நெறிகள் மறைந்து சைவம்மங்கத் தொடங்கியது. மனம் வருந்திய அரசியும் மந்திரியும் சோமசுந்தரக் கடவுளை அரசனைசமணவலையிலிருந்து காப்பாற்றுமாறு வேண்டினர்.

அந்நேரம் சிதம்பரத்திலிருந்து வந்திருந்த ஓர் சிவனடியாரான ஓர் அந்தணரைச் இருவரும்சந்தித்தனர். அவர் ஞானசம்பந்தரைப் பற்றி இவர்களிடம் கூறினார்
(சீர்காழியில் பிறந்த இவர் மூன்று வயதிலேயே இறைவன் வந்து முலைப் பாலுடன் சிவ ஞானத்தையும் குழைத்துஊட்டியதால் வேதங்களும் சிவ ஆகமங்களும் கற்காமலேயே அவர் ஓதினார். ஞானத்துடன்சம்பந்தர் இருந்தமையால் அவர் ஞான-சம்பந்தர் என்று அழைக்கப்பட்டார். அவர் ஒவ்வொருகோயிலாகச் சென்று வேதங்களை எல்லாம் தமிழ் பாமாலைகளாகப் பாடினார்) பாண்டியநாட்டில் சிவ மணம் கமழ மதுரைக்கு ஞானசம்பந்தர் வருகிறார் என்ற செய்தியை அரசியிடம்கூறினார்.

மங்கையர்க்கரசியும், குலசிறையாரும் மகிழ்ச்சியுடன் அவரை சந்தித்து விவரம் கூறி, சைவத்தைக் காத்திட வேண்டினார்கள். ஞான சம்பந்தரும் சோமநாதரை வணங்கி வாதத்தில் சமணர்களை வெல்லும் வலிமையை தனக்கருள திருப்திகம் பாடினார்.

சம்பந்தர் வரவை அறிந்த சமணர்கள் ஒன்று சேர்ந்து அபிசார யாகம் செய்தனர். ஞானசம்பந்தர்தங்கியிருந்த வாகீச முனிவர் மடத்தை தீக்கடவுளை அழைத்து தீக்கிரையாக்கும் படி வேண்ட, தீக்கடவுள் மறுத்தார் அதனால் சமணர்கள் தாமே தீயை மடத்தில் ஏவினார்கள். உடனே ஞானசம்பந்தர் சமணர்களின் பொய் மொழியைக் கேட்டு பழைய முறைகளைக் கைவிட்ட பாண்டியனைத் காக்கும் படி சோமசுந்தரர் மேல் தமிழ் மறைப் பதிகம் பாடினார்.

தீயானது பாண்டியனைப் பற்றியது. வெப்பம் தாங்காது தவித்தான் பாண்டியன். அவன் அருகில்இருந்த பொருட்கள் எல்லாம் கருகின. சமணர்களின் மருந்து மந்திரம் எதிலும் பாண்டியன் குணமாகவில்லை

அரசியும் மந்திரியும் மன்னனிடம் இக்கொடிய நோயைத் தீர்க்க வல்லவர் ஞானசம்பந்தரே என்றனர். முதலில் சமணப் பற்றுடையத் தன்னை சைவர்குணமாக்குவது நியாயமற்ற செயல் என்றான். இந்த நோய் தீர ஒரே வழி இதுதான் என்று அரசி எடுத்துக்கூற, பாண்டியனும் வேறு வழி இன்றி அதற்கு சம்மதித்தான்.

மந்திரியும் அரசியும் ஞான சம்பந்தரிடம் சென்று அரசனின் பிணிவைத் தீர்த்து, சமணம்அழியுமாறு செய்ய வேண்டினர். ஞானசம்பந்தர் பார்வையாலேயே கூன்பாண்டியன் தெளிவடைந்தான். பாவியாகிய தன் நோய் தீர்த்து தன்னை காக்கும் படி வேண்டினான். இதைக் கேட்டு கொதிப்படைந்த சமணர்கள் பாண்டியனது வலப்பக்கத்து நோயை ஞானசம்பந்தரும் இடப்பக்கத்து நோயை சமணர்களும் தீர்த்து வைக்க அனுமதிக்க வேண்டினார்.

மன்னனின் அனுமதியுடன் முதலில் சமணர்கள் தங்களால் இயன்றதைச் செய்தார்கள். நோய் அதிகரித்ததால் சமணர்கள் தலைக் கவிழ்ந்தனர் .திருநீற்றுத் திருப்பதிகம் ஓதி கூடல் பெருமானின் திருமடைப்பள்ளிச் சாம்பலை அள்ளி, பாண்டியன் வலப்புறம் தடவினார் ஞானசம்பந்தர். உடனே வெப்ப நோய் தீர்ந்து வலப்புறம் குளிர்ந்தது.

மனம்மகிழ்ந்தமன்னன்தனதுஇடதுபக்கத்துநோயையும்தீர்த்துஅருளுமாறுவேண்டினார். சம்பந்தர் முன்போல திருநீறுபூச வெப்பம் முழுமையாக நீங்கிற்று. அத்துடன் அவன் கூனும் நீங்கி சூரியனைப் போல் சௌந்தர்யமாக காட்சிதந்தான். அதனால் அவன் சௌந்தர பாண்டியன் என்று அழைக்கப்பட்டான்.

ஞானசம்பந்தரின் நோக்காலும், ஸ்பரிசத்தாலும், வாக்காலும் நோய் தீர்ந்த பாண்டியன் அவர்காலில் வீழ்ந்து வணங்கி, சமணத்திலிருந்து நீங்கி சைவத்தை தழுவினான்.

**பல்லவி**
சோழன் பெண்ணை மணந்து அவன் தந்த அறிஞனை
அமைச்சனாக்கிக் கொண்டு ஆண்டான் கூன்பாண்டியன்
**அனுபல்லவி**
பாழடைந்த நெற்றியுடன் சமணனாகிய மன்னன்
பாலிக்க வேண்டி அரசிக்கு சம்பந்தனை காணச்செய்தாய்
**சரணம்**
தன் மீது சமணர் வைத்ததீயை மன்னன் மீதேவ
வந்த நோயை சொன்னபடி சமணர்கள் தீர்க்காத்தால்
மன்னன் சம்பந்தனை வேண்டிட இருபக்க
நோயுடன் கூனையும் திருநீறு பூசி நீக்கினீர்